SRI RAMACHANDRA
INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH
(Category - I Deemed to be University) Porur, Chennai
Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in
NEWS RELEASE

சென்னை, 17 ஏப்ரல் 2026

# ஸ்ரீ இராமச்சந்திராவில் 41வது பட்டமளிப்பு விழா

- **இந்திய தேசிய மருத்துவ ஆணையம் மற்றும் தேர்வுகள் வாரியத்தின் தலைவர் Dr. அபிஜத் சந்திரகாந்த் ஷேத் - பட்டமளிப்பு உரையாற்றினார்.**
- **எம்.பி.பி.எஸ் தேர்வில் சிறப்பாக தேர்ச்சி பெற்ற Dr. ஜானவி ஸ்ரீதருக்கு மூன்று தங்கப்பதக்கங்கள்**

ஸ்ரீ இராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் 41வது பட்டமளிப்பு விழா இன்று நடைபெற்றது. இந்திய தேசிய மருத்துவ ஆணையம் மற்றும் தேர்வுகள் வாரியத்தின் தலைவர் Dr. அபிஜத் சந்திரகாந்த் ஷேத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவர் சிறப்பாக தேர்ச்சி பெற்ற 53 மாணவர்களுக்கு தங்கப்பதக்கங்களை வழங்கினார். அவர் எம்.பி.பி.எஸ் தேர்வில் சிறப்பாக தேர்ச்சி பெற்ற Dr. ஜானவி ஸ்ரீதருக்கு மூன்று தங்கப்பதக்கங்களை வழங்கினார்.

விழாவில் உரையாற்றிய Dr. அபிஜத், பட்டம் பெறும் இளம் மாணவர்களிடம் எப்போதும் கருணை உணர்வுடன் நோயாளிகளை அணுகி பொறுமையாக உரையாடுவது அதி நவீன மருத்துவ சிகிச்சையை காட்டிலும் சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்று கூறினார். நவீன தொழிற்நுட்பம் மருத்துவத்துறையை மாற்றியமைத்தாலும் பரிவுணர்வுடன் கூடிய சிகிச்சையே நல்ல மருத்துவ நடைமுறையாகும். செயற்கை தொழிற்நுட்பம், ஊடுருவல் சிகிச்சை மற்றும் துல்லியமான மருத்துவ முறைகள் ஆகியவை மருத்துவத்துறையை மேம்படுத்தி வருகிறது. மாணவர்கள் தங்கள் மருத்துவ திறன்களை வளர்த்து, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் மருத்துவத்தில் ஈடுபட வேண்டும். நம் நாட்டிற்கு திறமையான, சமூக பொறுப்புணர்வுள்ள மற்றும் மருத்துவ நெறிமுறைகளை பின்பற்றும் மருத்துவர்களே தேவைபடுகின்றனர் என்று அவர் மேலும் கூறினார்.

இணைவேந்தர் திரு. R.V. செங்குட்டுவன் மருத்துவம், பொறியியல் மற்றும் மேலாண்மை துறைகளில் 902 மாணவர்களுக்கு முனைவர், முதுநிலை மற்றும் இளநிலை பட்டங்களை வழங்கினார்.

முன்னதாக வரவேற்புரையாற்றிய துணைவேந்தர் Dr. உமாசேகர் நிறுவனத்தின் 2025-26ஆம் ஆண்டின் கல்வி மற்றும் ஆராய்ச்சி சாதனைகளை எடுத்துக் கூறினார். இந்திய அரசின் நிதி ஆதரவுடன் எண்ம மருத்துவம், நோய் கண்டறிதல், மருத்துவ தொழிற்நுட்பம், சுத்தமான ஆற்றல் மற்றும் கழிவு மேலாண்மை போன்ற துறைகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார். கடந்த அண்டில் 1811 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிடப்பட்டும், மூன்று காப்புரிமைகள் மற்றும் 71 பதிப்புரிமைகளும் பெறப்பட்டுள்ளன. ஸ்ரீ இராமச்சந்திரா பல்கலைக்கழகத்தின் நச்சு ஆய்வு மையம், தேசிய ஆய்வுக்கூடங்களின்

நன்முறை செயல்பாடுகளை கண்காணிக்கும் ஆணையத் தால் (GLP Compliance Monitoring Authority’s Certification) அங்கீகரிக்கப்பட்ட உலகளவில் மூன்றாவது மையமாகும். இந்த மையத்தில் தற்போது 22 நிதியுதவி பெற்ற ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன என்று அவர் மேலும் கூறினார்.

நிகழ்ச்சியில் ஸ்ரீ இராமச்சந்திரா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளையின் அறங்காவலர் திருமதி. சம்யுக்தா வெங்கடாசலம், இணைதுணைவேந்தர் Dr. மகேஷ் வக்கமுடி, மருத்துவக்கல்லூரி தலைவர் Dr. K. பாலாஜி சிங், பதிவாளர் Dr. S. செந்தில்குமார், ஆய்வுத்துறை தலைவர் Dr. P. வெங்கடாசலம், தேர்வுகள் கண்காணிப்பாளர் Dr. R. பத்மாவதி, நிதித்துறை இயக்குனர் திரு. J. ரவிசங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் மற்றும் பிறதுறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

………..

Issued by ….Mr. D. Sivagnanavel, Head-Media & Corporate Relations, SRIHER, 9444 448616.
Ms. P. Kavitha, Sr. Executive, Media Relations, SRIHER, 9444066154.